[1992 மார்ச் 23

304—

ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டிடம்.

*1530 திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், திருத்துறைப்பூண்டி, கொருக்கை ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் வாடகைக் கட்டிடத்தில் இயங்கிக் கொண்டிருப்பதால் புதிய கட்டிடம் கட்ட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும். (ஆ) இல்லை.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொருக்கை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு இடம் வாங்கப்பட்டது. அநேகமாக அது ஒரு போக்குவரத்து வசதி இல்லாத கிராமம். டாக்டர்கள் போய்வரவேண்டுமென்றால் கூட சரியான பாதை வசதி இல்லை. அந்த ஆரம்ப சுகாதார நிலையம் ஒரு கீற்றுக் கொட்டகையில் இயங்கி வருகிறது. பெரும்பாலான கிராம மக்கள் வரக்கூடிய பகுதி. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகிறபோது, அதற்குச் செயற்குறிப்பு இல்லை என்று சொன்னார்கள். இது போன்ற பின்தங்கிய பகுதிகளில் இருக்கும் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் அவசியம் கட்டவேண்டும். அது சம்பந்தமாக அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதை முதல் கேள்வியாக இப்போதுதான் கேட்கிறார்கள். இதற்கு முன்னாலே கேட்டிருக்கிறாரா என்று தெரியாது. ஆனால் இந்த ஆண்டு அரசினுடைய நிதிப் பற்றாக்குறை எவ்வளவு கடுமையாக இருக்கிறது என்று உங்களுக்குத் தெரியும். எனவே, நிதிப் பற்றாக்குறை சூழ்நிலைமைகளைப் பற்றி நாம் ஏற்கனவே சொன்னபடி அவை சரியாகின்றபோது இது பற்றி ஆலோசனை செய்யமுடியும். இருந்தாலும் தற்காலிகமாக அங்கே கூடுதலான வசதிகளை, செலவினம் அதிகம் இல்லாமல் செய்யமுடியுமா என்பதைமட்டும் பார்க்கலாம். எனவே, கட்டிடம் கட்டுவது என்பது உடனே எடுத்துக் கொள்ளப்

படுமா என்பதிலே நிதிப்பிரச்சினையின் காரணமாக சந்தேகம் இருக்கிற காரணத்தால், அது உரிய நேரத்திலே கவனிக்கப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாற்று யோசனை ஏதாவது ஆலோசிக்கலாம் என்று சொன்னார்கள். அந்தப் பகுதி யிலே ஓட்டு வீடுகளே கிடையாது. அப்படிப்பட்ட ஒரு கிராமம் அது. ஆக, அங்கு கட்டிடம் கட்டுவது மிகவும் அவசியமான ஒன்று. நான் ஏற்கெனவே இருந்த அரசிடத்திலும் வலியுறுத்தி இருக்கிறேன். இப்போதும் நமது அரசிடம் வலியுறுத்துகிறேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைத் துரிதமாகச் செய்ய, மீண்டும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர் களுடன் கலந்து பேசி, நடப்பு ஆண்டில் எடுக்கக்கூடிய திட்டத் திலேயாவது இதைச் சேர்த்துக் கொள்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே கேள்வி போட்டதாக ஒத்துக் கொண்டார்கள். எனவே அப்போதெல்லாம் நடக்காது என்ற முடிவோடு அவர்கள் அதை விட்டுவிட்டார்கள். அப்படித்தான் நான் கருதுகிறேன். இப்போது நமது புரட்சித் தலைவி அவர் களுடைய அரசுக்கு இந்த ஆண்டு இருக்கின்ற நிதிப் பிரச்சினை பற்றி உங்களுக்கு நன்றாகத் தெரியும். எனவே, நிதிப் பிரச் சினை தீருகிற நேரத்திலே இதைத் தீர்ப்பதற்கு உரிய நட வடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 305. திரு. எஸ். எம். துரை. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

305—

தருமத்துப்பட்டி—பன்றிமலை மலைப்பாதையில் போக்குவரத்து

*3499—திரு. எஸ். எம். துரை:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தருமத்துப்பட்டி—பன்றிமலை மலைப்பாதை அமைக் கப்பட்டும் இன்னும் போக்குவரத்து தொடங்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பன்றிமலை மற்றும் ஆடலூர் மலைவாழ் மக்களுக்கு ராணிமங்கம்மாள் போக்குவரத்துக் கழகம் மூலம் மினி பஸ் விடப்படுமா?